**இலங்கை அணுசக்தி சபை - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

இலங்கை அணுசக்தி சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கை அணுசக்தி சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தன என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்தது என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தன என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

### 1.5.2 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னாள் அணுசக்தி அதிகாரசபைக்கு எதிராக 2010 ஆம் ஆண்டில் ஊழியரொருவரால் சட்ட வழக்கு தொடரப்பட்டிருந்தது. அணுசக்தி சபையின் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு அனைத்து பிரதிவாதிகளினதும் உடன்படிக்கை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பன இன்றி வாதியை 2006 ஆம் ஆண்டிலிருந்து எம்எம் சம்பளக் குறியீட்டிலுள்ள சம்பள அளவுத்திட்டம் ஒன்றில் வைத்திருப்பதற்கு 2016 நவம்பர் 29 இல் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத் தீர்மானத்தை கருத்தில்கொண்டு சட்ட வழக்கு வாதியால் ஒருதலைப்பட்சமாக மீளப்பெறப்பட்டிருந்தது. அதற்கிணங்க அரசாங்கத்தின் உரிமைகளிற்கு எதிராக பணிப்பாளர் சபையால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. மேலும் 2019 ஆம் ஆண்டின் போது சம்பள நிலுவைகளாக அவ் உத்தியோகத்தரிற்கு ரூபா 2,961,304 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக எதிர்காலத்தில் பரிந்துரைகள் வழங்கப்படும் போது முழுமையாக கருத்தில் கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | முறையான அதிகாரத்தை கொண்டிருக்காமல் தீர்மானங்கள் எடுக்கப்படக் கூடாது. அத்துடன் அரசாங்க உரிமைகளை பாதிக்கின்ற பணிப்பாளர் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரமான தற்போதைய நடவடிக்கையை சீர்செய்வதற்கு நிதிப் பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூர் கொள்வனவிற்கான தீர்ப்பனவு செய்யப்படாத ரூபா 1,614,672 தொகையான முற்பண மீதியில் ரூபா 1,116,663 தொகை 2020 யூன் 30 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்களில் Argon மற்றும் காகிதாதி கொள்வனவிற்காக வழங்கப்பட்ட முற்பணங்களைத் தவிர ஏனைய முற்பணங்கள் ஏற்கனவே தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. | உரிய காலப்பகுதியினுள் முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு எதிர்காலத்தில் போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2016 மார்ச் 31 ஆம் திகதிய 2016/05 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2020 மார்ச் 17 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதும் இது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | அரச நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய 30/94 ஆம் அரச கணக்குகள் சுற்றறிக்கை | வெளிநாட்டு உதவி தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 16,474,125 தொகையான 12 வெளிநாட்டு மானிய பெறுகைகள் பொதுத் திறைசேரியூடாக பெறப்படாமல் சபை மூலம் நேரடியாக பெறப்பட்டிருந்தன. | முன்னைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக இம் மானியங்கள் பெறப்பட்டிருந்தன. சரியான முறைகளை பின்பற்றி 2020 ஆம் ஆண்டிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வெளிநாட்டு மானியங்கள் தொடர்பாக உரிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 2010 திசெம்பர் 10 ஆம் திகதிய 01/2010 ஆம் இலக்க வியாபார, கட்டணங்கள் மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக சபையின் 3 உத்தியோகத்தர்களால் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களிற்கு உரித்துள்ள திகதிக்கு முன்னர் 05 தொடக்கம் 08 ஆண்டுகளில் முதலாவது அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்தது. மேலும் 02 தொடக்கம் 04 ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் இரண்டாவது அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக முதலாவது அனுமதிப்பத்திரம் ஏறத்தாழ 01 தொடக்கம் 06 ஆணடு காலப்பகுதிக்கு முன்னர் 05 உத்தியோகத்தர்களால் பெறப்பட்டிருந்தன. | உரிய காலப்பகுதியை பூர்த்தி செய்வதற்கு முன்னர் சலுகை அடிப்படையில் வாகன அனுமதிப்பத்திரங்களை பெற்றிருந்த அனைத்து உத்தியோகத்தர்களினதும் தனிப்பட்ட கோவைகளிற்கு கடிதங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக எதிர்காலத்தில் பரிந்துரைகள் வழங்கப்படும் போது முழுமையாக கருத்தில் கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | உரிய வியாபார, கட்டணங்கள் மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஈ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 8.5 ஆம் பந்தி | நிறுவனத்திலுள்ள சொத்துக்களின் பாதுகாப்பிற்காக காப்புறுதி பூட்கையொன்று காணப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான ரூபா 1,446,880,651 பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்காக அத்தகைய முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | கமா நிலையத்தின் சொத்துக்களிற்காக காப்புறுதிப் பூட்கை ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்ததுடன் அழிவு எதிர்ப்பு சோதனைக்கான தேசிய நிலையம் மற்றும் தலைமை அலுவலகம் என்பவற்றிற்கான சொத்துக்களை காப்புறுதி செய்வதற்கு தேவையான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | உரிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 6.5.1 ஆம் பந்தி | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் நிதிக்கூற்றுக்கள் 106 நாட்கள் தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக 2020 மார்ச் 13 இல் நடாத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட சபைக் கூட்டம் நடாத்தப்பட முடியாதிருந்ததுடன் சாதாரணமாக அலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நடாத்தப்பட்ட முதல் கூட்டத்தில் நிதிக்கூற்றுக்களிற்கான அங்கீகாரம் பெறப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | உரிய பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் உரிய திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) | 5 ஆம் பந்தி | 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிற்கான நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதியொன்று பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பின்னர் 2019 ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 – 2020 ஆண்டுகளிற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் 2021 – 2023 ஆண்டுகளிற்கான கூட்டிணைந்த திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | உரிய பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன் அத் திட்டத்தின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2017 ஒக்தோபர் 25 ஆம் திகதிய 05/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை | எனது முன்னைய கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டவாறு தரம் IV சேவை தொழில்சார் படிகளிற்காக கருத்தில் கொள்ளப்பட முடியாதிருந்த போதிலும் 9 உத்தியோகத்தர்களிற்கு தொழில்சார் படிகளாக ரூபா 370,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தொழில்சார் படி கொடுப்பனவிற்காக கருத்தில் கொள்ளப்படக்கூடிய சேவைத் தரங்களை தெளிவுபடுத்துவதற்காக 2020 பெப்ரவரி 20 இல் அமைச்சு செயலாளர் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அவ்விளக்கங்களை பெற்ற பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். | உரிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

செயற்பாட்டு விளைவு ரூபா 27,974,911 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 413,699 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 23,388,610 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த மீண்டெழும் மானியம் ரூபா 11,630,000 ஆலும் உணவு மாதிரிப் பரிசோதனையிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 17,253,963 ஆலும் அழிவு எதிர்ப்புப் பரிசோதனைக்கான தேசிய நிலையத்தின் வருமானம் ரூபா 16,829,189 ஆலும் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளிற்கான நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 3,864,974 தொகையான தேறிய இலாபம் 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,456,454 தொகையான தேறியலாபம் வரை குறைவடைந்திருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் ரூபா 413,699 தொகையான தேறிய நட்டம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது இது ரூபா 27,974,911 தேறியலாபம் வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளிற்கு மேற்கொள்ளப்பட்ட ஊழியர் சம்பளச் சீராக்கங்களை கருத்தில் கொள்ளும் போது 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 100,011,637 தொகையான சபையின் பங்களிப்பு 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 159,872,865 தொகை வரை ஒழுங்குமுறையாக அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை அணுசக்தி அதிகாரசபையின் பழைய தலைமை அலுவலகக் கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டு 99 ஆண்டு குத்தகை உடன்படிக்கையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட ஒருகொடவத்த பகுதியில் அமைந்துள்ள காணி களனி பால செயற்திட்டத்திற்கு தேவைப்பட்டதன் காரணமாக சபையை மீள நிறுவுவதற்காக மாற்றுக் காணியொன்று நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ரூபா 181 மில்லியனிற்கு மாலபே பகுதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அக் காணியில் அணுசக்தி சபையின் பழைய கட்டிடத்திற்கு சமமாக புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் 2015 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 யூன் மாதத்தில் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தது. அதேநேரம் மேற்குறிப்பிட்ட வேலைக்காக 30 ஆண்டு குத்தகைக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் பெறப்பட்ட காணியொன்றை பயன்படுத்துவதற்கு அணுசக்தி சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் முத்தரப்பு புரிந்துணர்வு விஞ்ஞாபனமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அவ் உடன்படிக்கையின் பிரகாரம் சபைக்கு அக்காணியை வழங்குவதற்கும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் பயன்பாட்டிற்கு மாலபேயில் அமைந்துள்ள காணியை விடுவிப்பதற்கும் காணிகளின் தீர்ப்பனவின் போது | புதிய கட்டிடம் அமைந்துள்ள காணி இலங்கை அணுசக்தி சபைக்கு சட்டரீதியாக கையளிக்கப்பட்டிருக்காததுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் சட்டரீதியாக அணுசக்தி சபைக்கு கட்டிடம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கட்டிடம் மதிப்பிடப்பட முடியாதிருந்தது. கையளித்தல் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக வரிசை அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தல்கள் தொடர்பாக மேலதிக செயலாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். குறித்த செயற்பாட்டின் ஊடாக இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | உரிமைத்துவம் மற்றும் காணிகளின் கிரயம் தொடர்பான சிக்கல்களை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

உரிய தரப்பினர்களால் பெறுமதிகளின் வேறுபாட்டை தீர்ப்பனவு செய்வதற்கும் தரப்பினர்கள் இணங்கியிருந்தனர். எனினும் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அக் காணியின் தீர்ப்பனவு தொடர்பில் போதியளவு முன்னேற்றம் காணப்படவில்லை.

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கதிரியக்க விரயத்தை அளவிடுவதற்கான சோதனை சேவைகளை வழங்குதல் மற்றும் சில பொருட்களில் அல்லது ஒரு பொருளில் கதிர்விச்சு அளவை அயனாக்கம் செய்தல் என்பன இலங்கை அணுசக்தி சபையின் செயற்பாடொன்றும் வலுவொன்றுமாகும். எனினும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பால்மாவின் கதிரியக்க மட்டம் 2019 ஆம் ஆண்டின் போது உள்ளூர் சந்தையில் பரீட்சிக்கப்பட்டிருந்த போதிலும் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா மாதிரிகள் உள்ளூர் சந்தையில் பெறப்பட்டு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூர் சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா, குழந்தைகளிற்கான போர்மிலா பால்மா என்பவற்றின் மாதிரிகள் உள்ளடங்கிய கதிரியக்க மட்டத்தை பரீட்சிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் 2020 சனவரி தொடக்கம் உயிரியல் விஞ்ஞானப் பிரிவால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இலங்கையிலுள்ள அதிக எண்ணிக்கையான மாவட்டங்களை மேவுகை செய்து 3 ஆண்டு காலப்பகுதிக்கு இச் செயற்பாட்டை அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உள்ளூர் சந்தையிலிருந்து பால்மா வியாபார குறியீட்டு பெயர்களை கொள்வனவு செய்வதற்கான நிதியேற்பாடுகள் உள்ளடங்கலாக சந்தை ஆய்வுகளிற்காக தயாரிக்கப்பட்ட இத் திட்டம் 2020 ஆம் ஆண்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சபையின் ஆற்றல்கள் மற்றும் அதிகாரங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 நிதிகள் குறைவாக பயன்படுத்தப்படுதல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான அணுசக்தி சபையின் ரூபா 140 மில்லியன் மதிப்பிடப்பட்ட மூலதன நிதியேற்பாட்டில் 52.3 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 73.3 மில்லியன் தொகை ஆண்டின் போது குறைவாக பயனடுத்தப்பட்டிருந்தது. மேலும் 14 மீண்டெழும் செலவின விடயங்களில் 30 சதவீதம் தொடக்கம் 254 சதவீதம் வரையான முரண் | பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மூலதன பாதீட்டை செலவிடுவதற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளின் மாற்றங்கள் காரணமாக குறித்த சில | நிதிகளின் திட்டமிடல் மற்றும் பயன்பாடு வினைத்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அவதானிகப்பட்டது. இதற்கு மேலதிகமாக ஆராய்ச்சி செயற்திட்டங்களை ஒருங்கிணைப்பதற்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,840,319 தொகையான நிதிகள் பெறப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,717,145 தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க அச் செயற்திட்டங்களின் நிதிச் செயலாற்றல் 7.86 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கைகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | Isotope Ratio Mass Spectrometer ஒன்று 2015 திசெம்பர் 02 இல் ரூபா 9,184,390 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவ் உபகரணம் இலங்கை அணுசக்தி சபையால் 2018 ஆகஸ்ட் 09 இல் பெறப்பட்டிருந்தது. அவ் உபகரணத்தை நிறுவுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 3,963,384 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் நிறுவுதலானது 2019 மே மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் யூன் 30 வரையிலும் வெளித்தரப்பினர்களிற்கு எந்தவொரு சேவையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உபகரணத்தில் ஏற்பட்ட பிழைகள் மற்றும் சந்தையில் Helium கிடைக்காதமை காரணமாக இவ் உபகரணம் விளைவற்றிருந்தது. | நிதிப்பிரமாணம் 780 இன் பிரகாரம் அரசாங்கத்தின் வேலைகள் மற்றும் சேவைகளை நிறைவேற்றும் போது சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 5,598,851 கிரயத்திலான spetrophoto Meter உபபாகங்கள் 2018 ஏப்ரல் 24 வரை அணுசக்தி சபையின் பழைய கட்டிடத்தில் நிறுவப்பட்டிருந்தன. எனினும் இது நாளதுவரை புதிய கட்டிடத்தில் நிறுவப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக அவ் உபகரணம் விளைவற்ற சொத்தொன்றாக காணப்பட்டிருந்தது. | எங்களது நிறுவன பொருளிருப்பில் இவ் உபகரணம் காணப்படுகின்றதன் காரணமாக பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 780 இன் பிரகாரம் அரசாங்கத்தின் வேலைகள் மற்றும் சேவைகளை நிறைவேற்றும் போது சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| செயற்திறனான பதவியணியை பேணத் தவறியமை மற்றும் உரிய காலத்தில் பதவியணி மீளாய்வு செய்யப்படாதமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு சிரேஷ்ட பதவியணி தரங்களில் 15, மூன்றாம் மட்டத்தில் 03, இரண்டாம் மட்டத்தில் 09 மற்றும் ஆரம்ப மட்டத்தில் 03 உள்ளடங்கலாக சபையில் 30 வெற்றிடங்கள் காணப்பட்டன. கமா நிலையத்தின் 38 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 04 பதவிகளில் 6 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டதுடன் 32 உள்ளபடியான பதவியணியினரில் 07 ஊழியர்கள் அணுசக்தி சபையின் தலைமை அலுவலகத்தில் பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர். | பொதுத் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டமை, ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்கள் பதவி விலகியமை மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படும் வரை ஆட்சேர்ப்புக்களில் தாமதங்கள் போன்ற விடயங்களினால் வெற்றிடங்களை நிரப்புதல் தாமதமாகியிருந்தது. எதிர்காலத்தில் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நிறுவனத்தின் சில பதவிகள் சேவைத் தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு தலைமை அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்தன. | பதவியணி தொடர்பாக காலரீதியான மீளாய்வொன்றை மேற்கொண்ட பின்னர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் நிறுவனத்தின் வெவ்வேறு பிரிவுகளின் செயலாற்றலை பாதிக்காத வகையில் மனித வளங்கள் முகாமை செய்யப்பட வேண்டும். |